செ.வெ.எண்:23 நாள்:11.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, தளபதி நகரில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் கொட்டும் மழையில், இருளர் இன மக்களிடம் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்து, பொதுமக்கள் மற்றும் தாய்மார்களுடன் மதிய உணவு அருந்தினார்.**

**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தலா ரூ.12 ஆயிரம் வீதம் மொத்தம் 15 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகள் மற்றும் 6 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.**

**உலக நாடுகள் பாராட்டும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் கொரோனா காலத்திலும், வெள்ள பேரிடர் காலங்களிலும் சிறப்பாக பணியாற்றி வருகிறார் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் பெருமிதம்.**

**இந்தியாவில் வேறு எந்த முதல்வரும் செய்யாத வகையில் கொரோனா இல்லாத நிலையையும் / தேர்தல் நேரத்தில் அறிவித்த 500 வாக்குறுதிகளில் 200-க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை கடந்த 6 மாதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி உள்ளார் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தகவல்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, தளபதி நகரில் இன்று (11.11.2021) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலையில் இருளர் இன மக்களிடம் குறைகளை கனிவுடன் கேட்டறிந்து, உடனடியாக 15 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகையும், 6 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார். பொதுமக்கள் வசிக்கும் குடிசை வீடுகளுக்கே நேரடியாக சென்று அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். பள்ளி மாணவ, மாணவிகள் கல்வி பயில்வதற்கு மின்சாரம் தடையாக உள்ளது என்ற கோரிக்கைகளையும் உடனே நிறைவேற்றி தரப்படும் என்றும், தளபதி நகரில் வசிக்கும் மாணவிகள் உயர் கல்வி பயில்வதற்கு நிதி வசதி இல்லை என கோரிக்கை வைத்தால் தனது சொந்த செலவில் கல்லூரி கட்டணத்தை செலுத்துவதாக மாணவிகளிடம் உறுதியளித்தார்.

**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்ததாவது:**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மூன்றாம்பட்டி ஊராட்சி, தளபதி நகரில் வசிக்கும் இருளர் இனத்தைச் சேர்ந்த 300 குடும்பத்தினருக்கு வீட்டுமனை பட்டா, மின்சார வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கடந்த 10 ஆண்டுகளாக கிடைக்கவில்லை என பொதுமக்களின் கோரிக்கைகள் செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி மூலமாக தெரிய வந்தது.

அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தளபதி நகரில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்டறிந்து, ஒரு வாரத்திற்குள் மின்சார இணைப்புகள் வழங்கப்படும். மேலும், பொதுமக்கள் வைத்த கோரிக்கைகள் படிப்படியாக ஆறு மாத காலத்தில் நிறைவேற்றித் தரப்படும்.

மேலும், மின்சார துறை சார்பாக மின் இணைப்புகளும், வருவாய் துறை சார்பாக வீட்டுமனை பட்டாக்கள், இருளர் இன சாதி சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக வீடுகள், 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், ஆழ்துளைக் கிணறு மற்றும் தனிநபர் இல்ல கழிப்பறைகள், சாலை வசதிகள் உடனடியாக ஏற்படுத்தித் தரப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுடைய அரசு மக்களுக்கான அரசு பொதுமக்களின் தேவையை அறிந்து ஒவ்வொரு திட்டமும் செயல்படுத்தப்படுகிறது என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தலா ரூ.12 ஆயிரம் வீதம் மொத்தம் 15 நபர்களுக்கு ரூ.1 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகள் மற்றும் 6 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார்.

மேலும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களிடம் சந்திரபட்டி ஊராட்சி மன்ற தலைவர் திரு.இன்பசேகரன் தலைமையில் சந்திரபட்டி ஊராட்சியை சேர்ந்த நரிக்குறவர் இன மக்கள் சுமார் 50 -க்கும் மேற்பட்டோர் பாசிமணி மாலைகளை அணிவித்து, கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.செங்குட்டுவன், திரு.அண்ணாமலை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.சுகவனம், திரு.வெற்றிசெல்வன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.என்.கே.ஆர்.சூரியகுமார், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.தேவராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.விவேகானந்தன், தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்பார்வை பொறியாளர் திருமதி.ஏ.ஏஞ்சலா சகாயமேரி, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.சதீஸ்குமார், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் திருமதி.சாந்தி, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.மலர்விழி, ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் திருமதி.உஷாராணி குமரேசன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் திருமதி.சத்தியவாணி செல்வம், ஊராட்சி மன்ற தலைவர்கள் திரு.ரஜினி செல்வம், திரு.பூபாலன், வட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, தனி வட்டாட்சியர் திரு.சம்பத், வட்ட வழங்கல் அலுவலர் திரு.சீனிவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.மகேஷ்குமரன், திரு.சிவபிரகாசம் மற்றும் மின்சார துறை, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி**